

நகர் ஊரமைப்பு துறை (DTCP)

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

நம்பியம்பாளையம் ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், நம்பியம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், க.ச. எண்கள். **46 & 45/1** - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:500

இணையதள விண்ணப்ப எண் : **JYCWQ43C** நாள்:26.05.2025

வ

குறிப்பு:-

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 6.72 ஏக்கர் (அ) 27200.00ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 141 (**EWS** மனைகள் உட்பட)

மனைப்பிரிவின் எல்லை :

நிலையிலுள்ள சாலை :

EWS மனைகளுக்கு தேவையான பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x10%**
(27200.00 ச.மீ - 6856.40 ச.மீ) **x 10%** = 2034.36 ச.மீ (10.0%)

EWS மனைகள் ஒதுக்கீடு பரப்பளவு
(மனை எண்கள் :25-38,47-59,108-118=38 மனைகள்) : 2131.22 ச.மீ **(10.48%)**

பொது ஒதுக்கீடுகள் : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 6856.40 ச.மீ :

II.(i)ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x10%**
= (27200.00 ச.மீ - 6856.40 ச.மீ) **x 10%** = 2034.36 ச.மீ (10.0%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = **2081.37** ச.மீ **(10.23%)** :

III. பொது உபயோகம்: (மொத்த பரப்பில் சாலைகளின் பரப்பு நீங்கலாக **1%** பரப்பு)

(A) LOCALBODY க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு
= (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x0.5% / 100**
= (27200.00ச.மீ - 6856.40 ச.மீ) **x 0.5%** = 101.72ச.மீ (0.5%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = **113.78** ச.மீ **(0.56%)** :

(B) TANGEDCO - க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு
= (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) **x0.5% / 100**
= (27200.00ச.மீ - 6856.40 ச.மீ) **x 0.5%** = 101.72 ச.மீ (0.5%)
ஒப்படைக்கப்பட்ட பரப்பு = **103.32** ச.மீ **(0.51%)** :

கட்டிட வரம்பு :

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ -ம் விடப்படல் வேண்டும்.

9.0மீ மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ -ம் விடப்படல் வேண்டும்.

மூலை முடுக்கு:-

12.0மீ முதல் 30.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 4.5மீ **X** 4.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை **(MA-1)** நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.02.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்:181, வீட்டுவசதிவாரியம் மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020 மற்றும் அரசாணை எண் `:141, வி.வ (ம) ந.பு.வ துறை நாள் `:16.07.2022 `-ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிவிற்கு தேவையான தார்சாலை வசதி மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், தலைவர் நம்பியம்பாளையம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 0.6மீ **X** 1.2மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.
8. குறைந்த வருவாய்க்கான பிரிவினருக்கான மனைகள் [(EWS) 25-38,47-59,108-118 : 38 மனைகள்] மனை உட்பிரிவு அல்லது மனை ஒருங்கினைப்பு செய்யக் கூடாது.
9. மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்துழுத்த மின்கம்பி பாதையினை மனைப்பிரிவு சாலைக்கு ஏற்ப அமைத்து கொள்ள வேண்டும்.

SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO: 130 /2025

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.

Signature valid
Signed by: Assistant Director
Location: Tiruppur
Date: 2025.07.23 15:31:02

Signature valid
Signed by: Village Panchayat President
Location: Tiruppur
Date: 2025.09.11 12:56:56